பதிவுத்துறைத்தலைவர் அலுவலகம்,
சென்னை –28.

சுற்றறிக்கை

ந.க.எண். 35083/சி1/2021 நாள்.23.11.2021.

பொருள்: சென்னை உயர்நீதிமன்றம் – பொதுநல வழக்கு W.P.No.10666/2021 – சிட்லப்பாக்கம் ஏரி ஆக்கிரமிப்பு அகற்றிட அறப்போர் இயக்கத்தால் வழக்கு தாக்கல் செய்யப்பட்டது – மாண்புமிகு உயர்நீதிமன்ற 08.09.2021 – ன் படி ஆக்கிரமிப்பினை அகற்றிட ஆணை பிறப்பிக்கப்பட்டது – நீதிமன்ற ஆணையினை நிறைவேற்ற தலைமைச் செயலாளர் தலைமையிலான கூட்டம் – முடிவு – நீர்நிலை என வகைப்படுத்தப்பட்ட நிலத்தில் ஆவணப் பதிவினை மேற்கொள்ள தடை விதித்தல் – தொடர்பாக.

பார்வை: 1 சென்னை உயர்நீதிமன்ற நீதிப்பேரணை எண். W.P.No.10666/2021, ஆணை நாள்.08.09.2021.

2. அரசு தலைமைச் செயலாளரின் தலைமையின் கீழ் நடைபெற்ற கூட்டம் (நீர் மேலாண்மைத்துறை) விபரம், நாள்.02.11.2021

******

செங்கல்பட்டு மாவட்டம் சிட்லப்பாக்கம் ஏரி, சேலையூர் ஏரி, அவற்றின் உள்நீர்வழிப்பாதை மற்றும் உபரி நீர் வெளியேற்றும் பாதை ஆகியவை தனியார்களால் ஆக்கிரமிக்கப்பட்டு கட்டடங்கள் உள்ளதாகவும் இதனால் ஒவ்வொரு வருடமும் மழைக்காலங்களில் ஏரியினை சுற்றியுள்ள அனைத்து பகுதிகளும் மழை வெள்ளத்தால் சூழப்படுவதாகவும் இதனால், உயிரிழப்புகள் பண இழப்புகள் ஏற்பட்டு பொது மக்கள் பாதிக்கப்படுவதாகவும், நீர்நிலை ஆக்கிரமிப்பினால் கோடை காலத்தில் நிலத்தடி நீர்மட்டம் குறைவதாகவும் தெரிவித்து அதனை அகற்றிடவும் சிட்லப்பாக்கம் ஏரிக்கு சொந்தமான நிலத்தினை மீட்டிடவும் 'அறப்போர் இயக்கம்' என்ற அமைப்பினால் சென்னை உயர்நீதிமன்றத்தில் ஒரு பொது நல வழக்கு தொடரப்பட்டதில் பார்வை –5 ல் கண்டபடி ஆணை வழங்கப்பட்டுள்ளது.

Verified © RealEstate

மேற்கண்ட ஆணையில் மேற்கண்ட ஏரிகளில் உள்ள ஆக்கிரமிப்புகளை உடனடியாக அகற்றிடவும் எடுக்கப்பட்ட நடவடிக்கை குறித்து அறிக்கை சமர்ப்பித்திடவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் உயர்நீதிமன்ற ஆணைக்கிணங்க தமிழக அரசின் தலைமை செயலாளர் அவர்களின் தலைமையில் சம்மந்தப்பட்ட அனைத்து அரசுத்துறை உயர் அதிகாரிகளுடன் 02.11.2021 – அன்று கூட்டம் நடத்தப் பெற்றது. இக்கூட்டத்தில், தமிழகம் முழுவதும் உள்ள நீர்நிலைகள், உள் மற்றும் வெளி நீர்வழிப்பாதைகள், நீர்பிடிப்பு பகுதிகளில் ஏற்பட்டுள்ள ஆக்கிரமிப்புகளை தடுப்பதன் பொருட்டு ஒவ்வொரு துறையிலும் மேற்கொள்ளப்படவேண்டிய நடவடிக்கைகள் குறித்து முடிவெடுக்கப்பட்டது.

அதன்படி, நீர்நிலைகள், நீர்வழிப்பாதைகள், நீர்பிடிப்பு பகுதிகள் மற்றும் அதனைச் சார்ந்த அரசு புறம்போக்கு நிலங்களை எக்காரணம் கொண்டும் எந்த ஆவணப்பதிவும் மேற்கொள்ளக் கூடாது என பதிவு அலுவலர்களுக்கு அறிவுறுத்தப்படுகிறது. இதனை தங்களின் எல்லைக்குட்பட்ட பதிவு அலுவலர்கள் சரிவர கடைபிடிப்பதை சம்பந்தப்பட்ட மாவட்ட பதிவாளர்களும் துணை பதிவுத்துறை தலைவர்களும் உறுதி செய்திட கோரப்படுகிறது.

இதனை மீறி ஆவணங்கள் ஏதும் பதிவுசெய்யப்பட்டால் சம்பந்தப்பட்ட பதிவு அலுவலர், மாவட்ட பதிவாளர் மற்றும் துணை பதிவுத்துறை தலைவர் அதற்கு பொறுப்பாக்கப்படுவார்கள் என்றும் அவர்களின் மீது தமிழ்நாடு குடிமைப்பணி (ஒழுங்கு மற்றும் மேல்முறையீடு) விதிகள் – 1973 விதி 17(பி) –ன் கீழ் ஒழுங்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும் எனவும் நீதிமன்ற ஆணையை புறந்தள்ளியதற்காக நீதிமன்ற அவமதிப்பு வழக்குக்கும் உள்ளாக நேரிடும் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

நீர்நிலைகள், நீர்வழிப்பாதைகள், நீர்பிடிப்பு பகுதிகள் ஆகியவை சம்பந்தப்பட்ட சொத்துக்களை தமிழ்நிலம் மென்பொருள் வழி கண்டறியவும் கணினி மயமாக்கப்படாத நத்தம் நிலங்களை பொருத்து அவற்றில் உள்ள நீர்நிலைகள், நீர்வழிப்பாதைகள், நீர்பிடிப்பு பகுதிகளின் விபரங்களை வருவாய் துறையினரை தொடர்பு கொண்டு சொத்துக்களின் பட்டியல்

Verified RealEstate™

பெற்றுக்கொள்ளவும் தெரிவிக்கப்படுகிறது. மேலும், வழிகாட்டி பதிவேட்டில் மேற்கண்ட நிலங்களுக்கு '0' பூஜ்ஜிய மதிப்பு உட்புகுத்தவும் கோரப்படுகிறது.

மேலும் இந்தச் சுற்றறிக்கை பெற்றதற்கான ஒப்புதலை அனைத்து சார்பதிவாளர்களிடமிருந்து மாவட்ட பதிவாளர்களும் மாவட்ட பதிவாளர்களிடமிருந்து துணை பதிவுத்துறை தலைவர்களும் பெற்று கோர்வை செய்துகொள்ள அறிவுறுத்தப்படுகின்றனர். துணை பதிவுத்துறை தலைவர்கள் தங்களின் ஒப்புதலை பதிவுத்துறை தலைவருக்கு அனுப்ப கோரப்படுகின்றனர்.

ஒம்/-23.11.2021.
பதிவுத்துறைத்தலைவர்

/ஆணைப்படி/

கூடுதல் பதிவுத்துறைத்தலைவர்
(முத்திரை மற்றும் பதிவு)

23/11/2021

பெறுநர்:

அனைத்து துணைப் பதிவுத்துறைத் தலைவர்கள்.
அனைத்து மாவட்டப் பதிவாளர்கள்.
அனைத்து பதிவு அலுவலர்கள்.

நகல்:

1. முதுநிலை நேர்முக உதவியாளர்,
மாண்புமிகு வணிகவரி மற்றும் பதிவுத்துறை அமைச்சர் அவர்கள்,
தலைமைச் செயலகம், சென்னை-9.

2. அரசு செயலாளர்,
வணிகவரி மற்றும் பதிவுத்துறை,
தலைமைச் செயலகம், சென்னை-9.

3. இயக்குநர்,
பதிவுத்துறை பயிற்சி நிலையம்,
சென்னை-14.

Verified RealEstate